இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 346 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 10 – வெள்ளிக்கிழமை 26 ஜூலை 2024 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 346 : Thiruvalluvar Year - 2055 - Aadi 10 - Friday 26 July 2024 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## நாடாளுமன்ற வளாகத்தில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!






ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, தெலுங்கானா போன்ற இந்தியா கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டதையடுத்து ஒன்றிய அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன. காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.,க்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சோனியாகாந்தி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்டோர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற இரு அவைகளின் தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மக்களவை தி.மு.க. குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன், மக்களவை தி.மு.க. கொறடா ஆ.ராசா, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, துணைத்தலைவர் மு.சண்முகம், கொறடா வில்சன், இரு அவைகளின் தி.மு.க. குழு பொருளாளர் ஜெகத்ரட்சகன் உட்பட தி.மு.க. எம்.பி.க்கள் உள்பட இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய பா.ஜ.க. ‘பட்ஜெட்’ மாநிலங்களுக்கிடையே பாகுபாட்டையும் பிளவு மனப்பான்மையையும்

### தூண்டும் வகையில் அமைந்திருப்பதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில்

# ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!

## கழகக் கூட்டணி எம்.பி.க்கள் ‘தமிழ்நாட்டை வஞ்சிக்காதே’ என முழக்கம்!

புதுடெல்லி, ஜூலை 26-

**நிதிநிலை அறிக்கையில் இந்தியா கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘பட்ஜெட்’ மாநிலங்களுக்கிடையே பாகுபாட்டையும், பிளவு படுத்தும் மனப்பான்மையையும் ஏற்படுத்தியுள்ளது. மூன்றாவது முறையாக பா.ஜ.க. ஆட்சியை நடத்துவதற்கு முட்டுக்கொடுக்க முனைந்துள்ளது. எவ்வித நிதி ஒதுக்கீட்டையும் செய்யாமல் தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் இந்தியா கூட்டணி ஆளும் வட மாநிலங்களிலும் நிதி ஒதுக்கீட்டை புறக்கணித்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் தனது அரசுக்கு முட்டுக் கொடுக்கும் ஆந்திரா, பீகார் மாநில அரசுகளுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.**

ஒன்றிய அரசின் இச்செயலை கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டன. காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**சோனியாகாந்தி - ராகுல்காந்தி பங்கேற்பு!**

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் சோனியாகாந்தி, எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி உள்ளிட்டோர் போராட்டத்தில் கலந்து கொண்டனர். தி.மு.க. சார்பில் நாடாளுமன்ற இரு அவைகளின் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன், மக்களவை கழக கொறடா ஆ.ராசா, மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, துணைத் தலைவர் சண்முகம், கொறடா வில்சன், இரு அவைகளின் கழகக் குழு பொருளாளர் ஜெகத்ரட்சகன் உட்பட தி.மு.க. எம்.பி.க்கள் அனைவரும் கலந்துகொண்டனர். அப்போது, பட்ஜெட்டில் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து, கைகளில் பதாகைகளை ஏந்தி கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

**கருப்பு உடையில் கழக உறுப்பினர்கள்!**

போராட்டத்தில் தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருப்பு உடை அணிந்து பங்கேற்றனர். பட்ஜெட்டில் தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு எம்.பி.க்கள் தமிழில் முழக்கமிட்டனர். வஞ்சிக்காதே, வஞ்சிக்காதே, தமிழ்நாட்டை வஞ்சிக்காதே என ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாட்டு எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பினர். பழிவாங்காதே, பழிவாங்காதே, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை பழிவாங்காதே என்றும் முழக்கங்களை எழுப்பினர்.

பட்ஜெட்டில் இந்தியா கூட்டணி ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்ற இரு அவைகளையும் ஒத்தி வைத்துவிட்டு விவாதம் நடத்த வேண்டும் என ஒன்றிய அரசை இந்தியா கூட்டணி கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. இதுதொடர்பாக இரு அவைகளிலும் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சிகள் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்தன. பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்டது தொடர்பாக இரு அவைகளிலும் விவாதிக்க வேண்டும் என நோட்டீஸில் தி.மு.க. வலியுறுத்தியது. ஆனால், விவாதம் நடத்த இரு அவைகளிலும் அனுமதி மறுக்கப்பட்டது.

இதனைக் கண்டித்து மக்களவை யில் இருந்து தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். அப்போது ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பினர்.

இதேபோன்று மாநிலங்களவையிலும் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர். பட்ஜெட்டில் தமிழ்நாடு உட்பட இந்தியா கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு எதிராகவும், ஒன்றிய அரசைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

### தோற்கடித்தவர்களை பழிவாங்க வேண்டாம்!

## பிரதமர் அவர்களே! தனிமைப்பட்டுப் போவீர்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

சென்னை, ஜூலை 26-

அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப அரசை நடத்தினால் பிரதமர் மோடி தனிமைப்படுத்தப்படுவார் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் பல்வேறு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ஒருசில மாநிலங்கள் நீங்கலாகப் பல்வேறு மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டிக்கும் வகையில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியுள்ளார்கள்.**

**பிரதமர் நரேந்திர மோடி அவர்களே,**

**“தேர்தல் முடிந்துவிட்டது, இனி நாட்டைப் பற்றியே சிந்திக்க வேண்டும்” என்று சொன்னீர்கள். ஆனால், நேற்றைய நிதிநிலை அறிக்கை உங்கள் ஆட்சியைக் காப்பாற்றுமே தவிர, இந்திய நாட்டைக் காப்பாற்றாது!**

**அரசைப் பொதுவாக நடத்துங்கள். இன்னமும் தோற்கடித்தவர்களைப் பழிவாங்குவதில் குறியாக இருக்க வேண்டாம். அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அரசை நடத்தினால், தனிமைப்பட்டுப் போவீர்கள் என அறிவுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

பதவி காக்கும் பட்ஜெட்

